... 5 | MAY 1956 | No. 2

# அமுது

A Siddha Medical Research Monthly.

## AMUTHU

An Anglo-Tamil Monthly Journal, for the advancement of Medicine, Indigenous to India, particularly - the Siddha System of South India which has its own uniqueness and greatness. Published in the last week of every month. Articles in English or Tamil from Research scholars or physicians on the Siddha System and its marvellous preparations are always welcome. Advertisement rates sent on application. Annual Subscription: India Rs. 4/– Other Countries Rs. 5.

Vol. I, Vol. II, Vol. III, and Vol. IV. A few copies are still available for library or reference. The full set of Four Volumes will be sent post free by registered post on receipt of Rs. 13/– only. Each vol. separately Rs. 4/– post free.

Single copies of Any of the available numbers sent post free As. 6, except the LEPROSY SPECIAL number As. 8. post free.

Address all communications to

Sadhu DEVADOSS, B.A., L.T., M.T.Sc.,
*Managing Editor, Amuthu,*
Dasarpuram, P.O. near Madras. (South India)

## "அமுது"

முதன் நான்கு வருஷத்திய வால்யம்-Vol. 1, (52-'53) Vol. 2 (53-'54) Vol. 3, (54-'55, Vol. 4. (55-'56) இவை தனித்தனியாக பைன்ட் செய்யப் பட்டது. ஒரு வருஷத்தியது தபால் சார்ஜ் உட்பட ரூ 4/-; 4 வருஷ புத்தகங்களும் சேர்ந்து ஆர்டர் செய்தால் ரூ 13/- க்கு அனுப்பப் படும். தமிழ் வைத்திய வாசகசாலைகளுக்கு அவசியம் வேண்டியது.

5-வது வருஷம் (ஏப்ரல் 56-மார்ச்சு 57) வருஷ சந்தா ரூ 4/- மணியார்டர் செய்து உங்களுடைய விலாசம் பதிவு செய்து கொள்ளுங்கள். மாதாமாதம் பத்திரிகை *அமுது* ஒழுங்காக அனுப்பப்படும்.

"அமுது" மானேஜர், தாசர்புரம் P.O. தின்னனூர். R.S.

# மதராஸ் ஸ்டேட் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ், லிமிடெட்.

## X 185 லேடிஸ் பிரிட்ஜ் ரோடு

## அடையாறு, :: மதராஸ்-20.

பிரஸிடென்ட்: வைத்திய ரத்ன காப்டன்

## G. ஸ்ரீநிவாசமூர்த்தி

பி. ஏ., பி. எல், எம். பி. ஸி. எம்.

1. ஆயுர்வேத, சித்த, யூனானி தேசிய மருந்துகள், சாஸ்திரீக முறைப்படியும், தக்க மேற்பார்வையுடனும் தயார் செய்து, தேசிய மருந்துகளை கையாளும் டாக்டர்களுக்கு சப்ளை செய்ய மதராஸ் ஸ்டேட் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களுக்கு வேண்டிய சுத்தமான மருந்து சாமான்களும் மூலிகைகளும் சப்ளை செய்யப்படும்.

2. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள, தேசீய இந்திய வைத்தியர்களும், இதரவிதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களும் ஷை சொஸைட்டியில் மெம்பராகச் சேரலாம்.

3. ஷை சங்கத்தில் பங்கு ஒன்றுக்கு ரூபாய் 5, பிரவேசக் கட்டணம் அணா 0-4-0ம், ஒரு மெம்பர் 1000 பங்குகள் வரை எடுத்துக்கொள்ளலாம்.

4. தேசீய வைத்தியர்கள் யாவரும் மேற்கண்ட சொஸைட்டியில் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி சொஸைட்டியை அபிவிருத்தி செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### எமது பிரசுர வெளியீடுகள்:

1. "வைத்ய யோக ரத்னவளி": ஆங்கிலத்திலும், தெலுங்கிலும் பிரசுரிக்கப்பட்டவை. கவர்மெண்டாரால் அனுமதிக்கப்பட்ட வைத்திய முறைகளும், மற்ற முறைகளும்; மருந்துகளின் தன்மைகளும் குணங்களும் அடங்கியவை. ஆங்கில பிரதி விலை ரூ. 6/- தெலுங்கு பிரதி ரூ. 6—8—0. தபால் கட்டணம், பேக்கிங் ஒவ்வொன்றுக்கும் முறையே ரூ. 1—2—0; பிரதி விலையுடன் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

2. "யூனானி பார்மகோபியா": இது யூனானி வைத்திய முறைகளையும், உபயோகங்களையும் குறிப்பிடும் நூல். ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது. பிரதி ஒன்றுக்கு ரூ. 3/- தபால் கட்டணம் பிரத்தியேகம்.

அடையாறு,
மதராஸ்-20.

Y. கொண்டல் ராவ்,
செக்ரடரி. எல். ஐ. எம்.

# AMUTHU

*Anglo - Tamil Monthly*

**Published on the 25th of every month: Devoted to Research in Indigenous medicine, particularly SIDDHA and for the dissemination of facts on Healthy living, Correct Diet & Nutrition research.**

Vol. 5 | MAY, 1956 | No. 2

# The Siddha System and the Govts. of India and Madras State.

The Siddha system of medicine is based on the **Tamil** Literature of South India written by various exponents, generally 18 in number, known as Siddhas, whose Medical and Chemical achievements are still a marvel both to the Medical and Chemical World—even at its present advanced state. Its preparations work wonders in various so-called incurable diseases—we have given numerous instances in our earlier issues. We will add one more—just to show its great value and need for intensive study and research. At the great public meeting of Siddha Physicians held at the Maha Jana Sabha Hall at Madras on 13-5-56 Dr. J. Dhyriyam M. D. Supdt. Govt. Mental Hospital (Retd.), a great practical exponent of Siddha Medicine, mentioned a very marvellous result, in a rare case—How a boy who had Rheumatic **Chorea**—had been very successfully treated by the use of **Van Melugu**, a great Siddha Remedy while there was no treatment in modern medicine, which could give a reliable and speedy cure, as by this wonder working medicine when properly prepared by purely Siddha methods. Apart from this great uniqueness, the Siddha system demands the greater attention of the India Government and the Madras Government in particular, for the following reasons:—

1. In the Madras State, almost 90% of the people resort to Siddha treatment which is available in one form or other in the villages and towns of South India, inspite of the fact, that the Siddha physicians do not receive any help or even recognition from the state for the valued services rendered to the people.

2. There are at the present day about 30,000 Siddha practitioners in Madras State alone, (Registered and Un-registered) and about 20,000 in Travancore Tamil areas, Pudukottah, Pondicherry and thousands more in Ceylon, Malaya, Burma, South Africa and Fiji Islands where there are Tamil settlers. In spite of this the Madras Government instead of giving the Siddha system the **premier** place among indigenous systems of South India, have not only given a very poor step-motherly treatment to the Siddha system, but are effectively Co-operative with the Union Government to give it a decent burial and raise the Sanskrit based Ayurveda—the premier place in Tamil Nadu also.

3. This is the greatest injustice of all neglects the Union Government has done to South India and Tamil Nadu. We hope, the two Governments will see the great injustice they are doing by neglecting this great medical science and system which is a loss not only to South India but to the whole World. and follow the path of Justice and fair play and give equal opportunities for the Siddha system, which has a great part to play in the treatment of diseases yet unknown to the Western World and even Modern Science.

---

## CENTRAL SIDDHA MEDICAL COUNCIL.

# A Great Public Meeting

Under the auspices of the Central Siddha Medical Council a public meeting was held in the Madras **Mahajana Sabha Hall** on May, 13, 1956. Dr. W. P. Perumal Mudaliar, Asst. Director of Public Health (Retd.) presided over the meeting.

The gathering was largely attended by Doctors versed in the Siddha System and its sympathisers, including Dr. J. Dhyriam Retired Superintendent of the Government Mental Hospital, Madras. Pandit A. Shanmugavelan, Hon., Secretary of the Council, welcomed the audience, dwelt on the efficacy of the Siddha System and its present deplorable condition due to want of Government patronage. He referred to the Madras State Conference of Siddha Practitioners and Sympathisers to be held at Palani in July next under the patronage of Siddha Dr. R. M. K. Sivasubramania Pillai of Palani.

Dr. Perumal in his opening address referred to the Cultural heritage of the 18 Siddhas, their medical system and its efficacy and popularity in Tamil Nadu.

Dr. Dhyriam also spoke about his research in this ancient system and his successful application thereof, more especially in mental cases. He was followed by Doctors Kumaraguru Chettiar

209562

who gave a very learned discourse on **Theraiyar** and his works. Rajavelu Mudaliar and others also spoke on the great merits of the Siddha System. A special feature at the meeting was a demonstration given by **Siddhayogi** Pallur **Nidhiananda Swami** on Siddha Yoga.

Moved by the Mr. Erode T. Srinivasa Mudaliar, and seconded by Dr. H. Devadoss, the President of the Central Siddha Medical Council, the following resolution was adopted :—

> Whereas the Government of India and its Legislatures have been encouraging Ayurvedic, Unani and Homeopathy, treating them as Indigenous and alloting huge sums for Research in these systems and whereas these Authorities have virtually ignored the Siddha System, the medical system of Tamil Nad, and the Madras State giving only a step-motherly treatment for the latter, this public gathering held in the Mahajana Sabha Hall under the auspices of the Central Siddha Medical Council resolves to request both the Governments of India and the Madras Ministry to establish a research Institute (Siddha) near Madras City to study and encourage and propagate the genuine indigenous Siddha System which is popular among the Tamilians in the south and further form a Committee of Physicians practicing this system so that their advice and help may be taken by the Governments to direct the work of the institute on right lines. It is further resolved to request the Government of India to include the encouragement of the Siddha System in its Second Five Year Plan and to establish Siddha Colleges, Siddha Hospitals, and Siddha Dispensaries in important places in Tamil Nad.

Siddha Dr. S. V. Sethu Rao proposed a hearty vote of thanks to the president and the speakers.

---


## EYE STRAIN REMOVED.

This precious gift of God "**Clear Vision**" has to be carefully preserved in these days of great mental and physical strain. We have perfected two Siddha Herbal preparations, (both for external use only) which help to overcome this unnatural strain and maintain clear eyesight for a long time.

### 1. DASAR'S HAIR OIL.

This special Siddha Hair Oil prepared with FRESH herbs, helps hair growth, makes the hair black, stops falling of hair. produces new growth in bald spots, checks hair splitting and bleach,

ing of hair; removes giddiness, cools the brain, removes watering and redness of eyes; improves **eyesight.** To be used for toilet every day in small quantities only.

x x x x x

There are numerous hair oils in the market from the West and North, that are highly advertised and sell by sheer force of intensive scientific advertisement. Dasar's Hair Oil needs so such boosting: it is welcomed by its own merit and is recommended uniformally by all who use it for some time.

x x x x x

Do not risk your eyesight by using foreign Hair Oils which which contain mineral oils and artificial scents: try this Dasar's Hair Oil for a brief period, and you will be satisfied and benefited greatly.

x x x x x

Our second preparation is **Dasar's Enna Oil,** for these who are accustomed to take the weekly oil bath to preserve perfect health as exhorted by the great medical sages of South India, known as **Siddhas.**

**Dasar's Enna Oil:** This herbal preparation in purely vegetable oil is a great remedy for preserving eyesight, keeps the body and brain cool and prevents eye strain in all forms. For its cooling effect and refreshing nature, there is nothing to equal it. Removes **watering** of eyes, particularly **after reading**, redness of eyes, itching, styes or hard swellings on the eyelids and keeps the vision clear and bright.

## DASAR'S ENNA OIL.

For bathing only. For all eye diseases. Veneral heat, Blood poison. Brain fatigue etc. An essentially cooling oil to the brain. A Boon to Brain Workers. Direction :- One to two tea spoonfuls to be applied on the head only, bathe after half an hour in hot water, may be used once or twice a week for bathing; use soapnut or cheeyakai.

Both these preparations are made under the direct supervision of Sadhu Devadoss, B. A., L. T., M. T. Sc. for sometime, Lecturer in Chemistry W. C. College, Madras and now Editor, Siddha Research Monthly "Amuthu".

Dasar's Laboratory, Dasarpuram. P. O. Tinnanur. R. S.
Near Madras.

**Madras Agents :**

4/27 Broadway, 127 Broadway and
M/S S. T. Paldano Sons, Purasawalkam, Madras.

# அமுது

தாசர்புரம், சித்த ஆராய்ச்சிக்கழக வெளியீடு
சுகாதாரம், உணவு ஆராய்ச்சி, நல்வாழ்வு இவற்றை
அடிப்படையாகக் கொண்ட வியாசங்கள் வெளிவரும்.

நிர்வாக ஆசிரியர்: சாது தேவதாஸ்
அமுது ஆசிரியர்குழு :—சித்த டாக்டர். M. அமிர்தலிங்கம்
G. கந்தசாமிராஜு, வித்வான் சேதுரகுநாதன்.

மலர் 5 | மே, 1956. | இதழ் 2

## ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வுதான். இந்த ஞானம் வந்தால்தான் நாம் நம் நாட்டு மக்களை நலமுற வாழவைக்க முடியும். நம் நாட்டில் தோன்றிய சித்தர்கள் விலை மதிக்க முடியாத மருந்து முறைகளை தங்கள் ஆராய்ச்சியின் பயனாக நமக்குக் கொடுத்து தவினார். குறுகிய அறிவுடைய சிலர் சித்தர் மருந்து முறைகளை வெறுப்பதோடு, இந்தக் கலையை அடியோடு அழித்து விடவும் முற்பட்டு விட்டார்கள். ஆனால் சித்த வைத்தியர்கள் ''தூங்காமற் தூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்'' என்ற நிலையில் இருப்பது மிகவும் வருந்தத் தக்கது.

தமிழ் நாட்டின்கண் சித்த மருத்துவர்கள் நீக்குதற்கரிய வியாதிகளை எல்லாம் பழம் பெருமை வாய்ந்த சித்தர் மருந்துகளால் குணப்படுத்தி நாட்டில் பெரும் புகழ் பெற்று விளங்குகிறார்கள். நமது நாடு சுதந்திரம் பெற்ற பின் நாம் பலவகையிலும் முன்னேற்றம் அடைவோம் என்று எதிர்பார்த்தோம்; ஆனால் ஏமாந்தோம். நம் தமிழகத்தில் சித்த மருத்துவக் கல்லூரி கூட இல்லை. வருங்காலத்தில் நம் புதல்வர், புதல்வியர்களுக்கு நமது பரம்பரை வைத்திய முறைகளைக் கற்று கொடுத்து அவர்களை நாட்டுக்குப் பயன் படுத்த முடியாத நிலையில் தவிக்கிறோம்; மற்ற மாகாணங்களில் ஆயுர் வேத, யுனானி வைத்தியத்திற்கு சர்க்காரின் உதவி கிடைக்கிறது, கல்லூரிகள் இருக்கின்றன. நமது சென்னை ராஜ்யத்தைத் தவிர வேறு ராஜ்யத்தில் சித்த மருத்துவத்திற்கு இடங்கிடையாது. நிலைமை இங்ஙனம் இருக்கும் பொழுது தமிழ் நாட்டில் சித்த மருத்துவத்திற்கு ஒரு கல்லூரியாவது வேண்டாமா? சிந்தித்துப் பாருங்கள்; சித்த மருத்துவத்தின் சிறப்பைப் பற்றி மேல் நாட்டு வைத்தியர்கள் பலர் மிகவும் பாராட்டி எழுதியும், பேசியும் இருக்கிறார்கள். ஆனால் நமது சுகாதார மந்திரி அவர்களுக்கு இதில் நம்பிக்கை இல்லை.

இந்த வித நிலையில், நாம் ஒன்று பட்டு நம் நிலையை அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறவேண்டும். புது டில்லியில் உள்ள இந்திய வைத்திய ஆராய்ச்சிக் கவுன்ஸில் கூறுவ தென்ன வென்றல் இந்திய மூலிகைகளை ஆராய்ச்சி செய்ததின் பயனுக, நல்ல பலன் கிடைக்கிறது என்றும், ஆயிரக்கணக்கான இந்திய மூலிகைகளினுல் இந்த நாட்டிலுள்ள பல வியாதிகளைக் குணப்படுத்த முடியுமென்றும், வெளி நாட்டு மருந்துகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை யென்றும் கூறுகிறது.

நமது இந்திய ஜனதிபதி **டாக்டர் ராஜேந்திர பிரசாத்** அவர்கள் இந்திய வைத்திய முறை மிகவும் மலிவானதென்றும், கிராம மக்களுக்கு மிகவும் சிக்கனமான முறையில் பயன் படுத்துவதற்கு இந்திய வைத்தியம் ஏற்றதென்றும், நம் நாட்டு மக்களுக்கு இந்திய வைத்தியத்தில் மிகவும் நம்பிக்கை இருந்து வருகிறதென்றும், மேல் நாட்டு வைத்திய முறையைக் கற்றவர்கள் இந்திய வைத்திய முறையை ஆராய்ந்துப் பார்க்காமல் வீணுக அதை இழிவாகப் பேசுவது தகாதென்றும் அவர்களுக்குச் சுடச் சுட பதில் கொடுத்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 13 ஆயுர் வேதக் கல்லூரிகளும், ஆயிரக்கணக்கான இந்திய வைத்திய சாலைகளும் இந்தியாவில் நிறுவும் திட்டம் ஒன்று தயாராகிறது. அவ்வகையில் ராஜ்ய சர்க்காரால் சுமார் ஐந்துக் கோடி செலவழிக்கப் படும் என்று தெரிகிறது. ஆதலால் ஷ திட்டத்தில் சித்த வைத்தியக் கல்லூரி ஒன்று ஏற்படுத்து வதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

திருவாங்கூர் - கொச்சி ராஜ்யத்தில் ஆயுர் வேத வைத்திய ஆராய்ச்சிச் சாலை ஒன்று பல லக்ஷங்கள் செலவு செய்து நிறுவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகிறது. ஆனுல் சென்னை ராஜ்யத்தில் சித்த வைத்திய ஆராய்ச்சி சாலை ஒன்று ஏற்படுவதற்கான யோசனையே கிடையாது. நாம் செய்யும் மருந்துகளைப் பரிசோதனை செய்வதற்கு வழி இல்லாமல் தவிக்கிறேம்; ஆதலால் அத்தகைய ஆராய்ச்சி சாலை ஒன்றை ஏற்படுத்தும் பொருட்டு சர்க்கார் கவனத்தைத் திருப்புவது, நம் சங்கள்கள் ஒன்று பட்டு வேலை செய்வதில் தான் இருக்கிறது.

விரைவில் பழனியில் சித்த வைத்தியர்கள் மகாநாடு ஒன்று நடைபெற ஏற்பாடு நடந்து வருகிறது. அந்த மகா நாடு வெற்றிகரமாக நடை பெற வேண்டு மானுல் உங்கள் முழு ஒத்துழைப்பும் அவசியம்.

மகா நாட்டின் வெற்றியே! நமது வெற்றி!!

**ஆ. ச. வேலன்.**

# சித்த வைத்திய மத்தியக் கழகத்தின் சிறப்புக் கூட்டம்.

———:o:———

நமது சித்த வைத்திய மத்திய கழகத்தின் சிறப்புக் கூட்டம் 13-5-56ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு சென்னை மவுண்ட் ரோடு மகாஜன சபா மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கூட்டத்திற்கு நகரின் பல பாகங்களிலிருந்தும், சுற்றுப் புறங்களிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் 100 பேருக்குக் குறையாத சித்த வைத்தியர்கள் வந்திருந்தனர். Dr. தைரியம் M.D. அவர்களும், ஈரோடு நகரசபை முன்னாள் தலைவரும் சித்த வைத்திய பேரபிமானியுமான உயர் திரு. T. சீனிவாச முதலியார் அவர்களும் வந்திருந்தனர்.

கூட்டம் சென்னை அரசாங்கத்தின் முன்னாள் சுகாதார உதவி டைரக்டர் Dr. W. V. பெருமாள் முதலியார் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று.

தலைவர் முன்னுரையில் சித்த வைத்தியத்தின் சிறப்புகளைப்பற்றிக் கூறியதோடு தான் ஆங்கில முறை வைத்தியம் பெற்று பதவியில் இருந்த போதிலும் தனக்கு எவ்வாறு சித்த வைத்தியத்தின் உயர்வு தெரிய வந்தது என்பதையும் விளக்கிப் பேசியபின் மருத்துவப் புலவரும், சென்னை அரசியலார் நாட்டு வைத்திய கல்லூரி சித்த வைத்தியப் பகுதி முன்னாள் தமிழ் விரிவுரையினருமான திரு. சி. குமரகுரு செட்டியார் அவர்கள் *"தேரையர் மருத்துவம்"* என்பதுபற்றிப் பேசினார். அவர் பேசுகையில் தேரையர் நூல் தொகையும், பெயர்களையும் விவரித்ததோடு, தேரையர் வைத்தியத்தின் சிறப்பையும், நூல் நயம், அவற்றின் இலக்கிய உயர்வையும் விரிவாக விளக்கியும், பல மருந்து முறைகளையும் விவரித்தார் (சொற்பொழிவின் விவரம் பின்னர் வரும்,

பின்னர் திருவாளர்கள். இராஜவேலு முதலியார் Dr. தைரியம் M.D. அவர்கள், வித்வான் ஆ. சண்முகவேலன், அகரம் பாசுராமன், பார்த்தசாரதி, காஞ்சி டாக்டர் நாகரத்தினம் ஆகியோர் சித்த வைத்தியத்தின் உயர்வு பற்றியும், மத்திய சர்க்காரும் இராஜ்ஜிய சர்க்காரும் அதற்கு தக்க பாதுகாப்பும் ஆதரவும் தருவதில்லை என்றும் சித்த வைத்தியர்களும் பொதுமக்களும் சர்க்காரும் அதற்கு ஆதரவு தரும்படி எந்தெந்த வகையில் பாடுபட வேண்டுமென்பதை விளக்கியும் சர்க்காரின் மாற்றுந்தாய் மனப்பான்மையைக் கண்டித்தும் பேசினர்.

சித்த வைத்தியர்கள் ஒன்றுபட்டு கட்டுப்பாட்டுடன், தமிழ் வைத்தியத்திற்காகப் பாடுபடும் ஒரே பத்திரிகையான "*அமுது*" வை பெரிதும் ஆதரித்து இன்னம் அதிக பக்கங்கள் வெளியிடும்படி அதன் ஆசிரியர் சாது தேவதாஸ் அவர்களுக்கு ஊக்கமளிக்கும்படியும், வைத்தியர்கள் தங்களுடைய வைத்திய ஆராய்ச்சி அனுபவங்களை *"அமுது"* வாயிலாக வெளியிட்டு சித்த வைத்தியத்தை பலப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்

கொண்டனர். இடையில் ஈரோடு நகரசபை முன்னுள் தலைவரும் சித்த வைத்திய அபிமானியும் ஆராய்ச்சியாளருமான திரு. T. சீனிவாச முதலியார் அவர்களால் முன் மொழியப்பட்டு சாது தேவதாஸ் அவர்களால் வழிமொழியப்பட்ட கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது:—

**தீர்மானம்:** இந்திய, சென்னை அரசாங்கங்கள், ஆயுர்வேதம், யூனானி, ஹோமியோபதி முதலிய முறைகளை மாத்திரம் ஆதரித்து அவைகளுக்கு ஏராளமாக பணம் ஒதுக்கி ஆராய்ச்சி செய்ய ஏற்பாடுகள் நடந்து வருவதாலும், ஷை இரு ஆட்சியும், தமிழ் நாட்டில் கையாண்டு வரும் சித்த வைத்தியத்தை ஆதரிக்காமல் இருப்பதற்கு, சித்த முறையில் பயிற்சி பெற்ற வைத்தியர்கள் அடங்கிய இம்மகா கூட்டம் மிக வருந்துவதோடு, இவ்விரு ஆட்சியாளரும் 2வது ஐந்தாண்டு திட்டத்தில் சித்த வைத்தியத்திற்கு தனியாகப் பணம் ஒதுக்கி, சென்னை யருகில், ஒரு விசேஷித்த சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையமும், சென்னை மாகாணத்தில், தனிப்பட்ட முறையில் சித்த வைத்தியக் கல்லூரிகளும், சித்த ஆஸ்பத்திரிகளும், சித்த டிஸ்பன்சரிகளும் ஆங்காங்கு நிருவ ஆதரவு கொடுப்பதுடன், ஷை விஷயங்களை நடத்த, சித்த வைத்தியர்களும் சித்த வைத்திய அபிமானிகளும் அடங்கிய ஒரு தனிக்கமிட்டி அமைத்து அவர்கள் மூலம் ஷை காரியங்களை இனிது நிறைவேற்ற விரைவில் ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

அடுத்த நிகழ்ச்சி, பள்ளூர் சித்தயோகி திரு. நித்தியானந்த சுவாமி சித்தயோக சாதனை முறைகளைப் பற்றி சொற்பொழி வாற்றி யோகப் பயிற்சி முறைகளை செய்து காட்டி அனைவருக்கும் புரியும்படி விளக்கினர்.

அதன் பின்னர் செயலாளர் Dr. S. V. சேதுராவ் நன்றிநவில கூட்டம் இரவு 8-மணி யளவில் இனிது முடிவுற்றது.

---

## "அமுது" அன்பர்கள் கவனிக்க.

*அமுது—இறைவன் அருளால், 4 ஆண்டுகள் முடிவடைந்து இவ்வருஷம் ஏப்ரல் மாதத்தோடு 5-ஆவது ஆண்டு ஆரம்பமாகிறது. பழைய சந்தாதாரருக்கும் மற்ற நண்பருக்கும், ஏப்ரல், மே-Vol. 5, No. 1 & 2 அனுப்பிவிட்டோம்: சந்தா (இந்தியா ரூ. 4/- சிலோன் முதலிய வெளிநாடுகள் ரூ. 5/-)வை, M. O. மூலம், இந்த விளம்பரம் கண்டதும் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேம். சித்த வைத்திய பத்திரிகை இது ஒன்றே. இதை தமிழ் மக்கள் யாவரும் ஆதரிக்க கடமைப்பட்டுள்ளார். மறந்துவிடாமல் கவனிப்பீர்களாக.*

"அமுது" மானேஜர்,

தாசர்புரம், P.O., தின்னனூர், R.S., (சென்னை அருகில்)

# நடமாடும் கோவில் திருப்பணி

வைத்திய பூபதி G. கண்ணுசாமி பிள்ளை
of Tiruvarur, Now Camping at
1338, South Rampart, Tanjore.

——x——

## நோயும் மருந்தும்

இவ்வுலகத்தையும் மக்களையும் படைத்த இறைவன் தனது மக்கள் உடலில் நோயும் ஒக்கப் படைத்ததில்லை, படைக்கவுமில்லை என்பது துணிபாம். மக்கள் உடலில் நிகழும் இயற்கைக்கு மாறான மிகைக் குறைவுகளால் சம்ப விக்கம் அவதியையே நோயென்பர். அவ்வகையில் அந் தந்த பூமி சார நிலைக்கும், உணவாதி, நடை, உடை, பழக்க வழக்கங் களுக்கும், மாறுபட்ட செய்கையாலும், தாவர சங்கம கிருமி விஷங்களாலும் நிகழ்வது நோயென் பது. நமது பொய்யா மொழி வள்ளுவனாரும் "மிகினும் குறையினும் நோய் செய்யும்" என்றும், "மாறு பாடில் லாத உண்டி மறுத்துண்ணிற் ஊறு பாடில்லை உயிர்க்கு" என்று அறிவுறுத்துவதாலும், தற் போதைய நவீன மாய் கையில் சிக்கிய மக்கள் மாறுபட்ட நடை, உடை, உண வாதிகளையும், மற்றும் புகைக் குடி, பிராந்தி, சாராயக் குடி, அபின், ஏன்! யோகத்தை வளர்த்த இந்தியாவில் மோகத்தை வளர்க்கும் காதல் பிரசாரங்களும், பிரசாரத் தூண்டு கிளர்ச்சிகளும், மற்றும் பெட்ரோல் புகை தூசி களுக்கும், நிலப்புகை ரதங்களும், இன்னும் கண்ணொளி யைக் கெடுக்கும் பாதரச [Mercury] மின்சார விளக்கு களும் நோய்களுக்கு தாராளமாக பூரண உதவி செய்து வரும் இந்தியாவில் மற்றும் மேற்கண்ட எல்லா வகைக்கும் ஆதரவளித்து வந்த வெள்ளையர் வெளியேறியும் அந்த வெளி நாட்டு நாகரீக பழக்கமோ, வெள்ளையர் அபிமான மோ இந்திய சுதந்திர சர்க்காரை வைத்தியத் துறையிலும் இன்று வரை விட்டபாடில்லையே! இந்தியத் தலைவிதி! இது வரை மேல் நாட்டு வைத்திய முறை ஆராய்ச்சியிலும் மது மேகம், காக்கை வலி, குஷ்டம், வெண் குஷ்டம், குருடு, செவிடு, குடல் வாதம், [Hernia] மூலம், [Piles] க்ஷயம், காசம், புற்று நோய் போன்ற கொடிய நோய் களுக்கு நிச்சயம் மருந்து கண்டதாக இல்லை.

இங்கிலையிலும் நமது இந்திய புராதன வைத்திய முறைகளை ஆராய்ந்து பார்த்து வெளி நாட்டவருக்கு மெய்

2/09562

பிக்கவும் நமது சர்க்கார் சுகாதார இலாக்கா அமைச்சர்களுக்கும் மன மில்லாது இருப்பது வருந்தத்தக்க தொன்றாகும்.

புற்று நோய்க்கு மூல காரணம் மேக நோய்தான் [Venereal diseases] என்பதை இந்திய சித்த ஆயுர்வேத யுனானி சாத்திரங்கள் வற்புறுத்து கின்றன. இந்த வகையில் இரசம், கந்தகம், பாஷாணம், தாளகம், பூரம், வீரம், தாமிரம், வங்கம், நாகம், துரிசு இவைகள் நன்கு சுத்தி செய்து சேர்த்து முதலில் ஜெயநீர் வகைகளால் அரைத்து அரைத்து உலர்த்தி ஏழு முறை மடக்கி மடக்கிப் பதங்கமாய் எரித்தும் மேகத்தைப் போக்கும் படியான சின்னி, கிரந்தி நாயகம், சங்கங்குப்பி, சித்திர மூலம், கொடிவிரட்டிப் பூண்டு, பூவரசம் பட்டை, வேப்பம் பட்டை, ஊழலாத்திப் பட்டை போன்ற மூலிகை, பட்டை இரசங்களால் அரைத்து அரைத்து பல முறை புடமிட்ட மருந்துடன் தங்கம், காந்தம், அப்ரகம், செந்தூரங்களும் சேர்த்து, சுத்தி செய்த செங்கோட்டை, சிவனார் வேம்பு, நீரடிமுத்து, கார்போக அரிசி முதலிய சேர்ந்த குழித்தைலம் சேர்த்துச் செய்த இரசகந்தி மெழுகு, நந்தி மெழுகு, அவைகளில் ஏதாவது ஒன்றைத் துணை மருந்தாக (அனுபானம்)க் கூடிய வரையில் பத்தியமாய் தேக பலம், நோய் பலம், வயது, உடல் நிதானமறிந்து உபயோகித்தால் நிச்சயமாகப் புற்று நோயைப் போக்கி இந்திய வைத்திய மகிமையை மெய்ப்பிக்கலாம் என்பது உறுதி. இதற்கும் சலுகையும், பொருளாதாரமும், அதனுடன் கூட இட வசதி, ஆராய்ச்சி நிலையங்களும் அமைக்க நமது சர்க்கார் கவனஞ் செலுத்தினாலன்றி எளிய நிலையில் உள்ள ஆதரவற்ற இந்திய ஏழை வைத்தியர்களுக்கு எப்படித் தான் இயலும்? (தொடரும்)

---

## இரங்குகின்றோம்.

சிறந்த சித்த வைத்தியரும், மத்திய சித்த வைத்தியக் கழகக் கிளை உதவி-தலைவருமான சித்த டாக்டர் K. G. நாகராஜமன்னையார் அவர்களின் தாயார் இரத்தினம்மாள் 22-4-56ம் நாள் இயற்கையெய்தியமை கேட்டு வருந்துகின்றோம். தாயைப் பிரிந்து வாடும் திரு. நாகராஜ மன்னையாருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆறுதல் கூறுகின்றோம்.

# குழந்தை வைத்தியம்.

## வைத்திய பாஸ்கர G. கந்தசாமி ராஜு

—:o:—

((Vol. 5.) *13-ம் பக்கத் தொடர்ச்சி*)

**ஊது மாந்தம் :-** இவ்வியாதி ஆரம்பத்தில் காய்ச்சலை உண்டு பண்ணி பின், வாந்தி, வயிற்றிரைச்சல், கழிச்சல் இவைகளை உண்டாக்கும். வாந்தியும், கழிச்சலும் அதிகமாகி குழந்தை மிக்க பலவீனம் அடைந்தும், ரத்தம் கெட்டு விடுவதால் உடலில் ஒருவித வீக்கம் உண்டாகி குழந்தை காற்றடைத்த பலூன் மாதிரி ஊதலாக இருக்கும். இந்நிலையில் கழியும் மலமானது வெள்ளை நிறமாகவும், நுரையாகவும் இருப்பதுடன் தொண்டையும் சிவந்து வீங்கி இருக்கும். கம்மிய குரலோடு அழும், பால் குடிக்காது.

இதே போன்று கணை மாந்தம், கட்டு மாந்தம், பால் மாந்தம், போர் மாந்தம், முக்கு மாந்தம், விச மாந்தம், கழிச்சல் மாந்தம் இன்னும் எத்தனை வகை மாந்த ரோகங்கள் உண்டோ அவைகள் யாவும் மாந்தத்தின் பொதுக் குணங் குறிகளோடு, அதன் பெயருக்குத் தக்கபடி குழந்தைகளை மிக்கத் துன்புறுத்தும்.

எமது அனுபவத்தில். இந்த மாந்த ரோகங்களுக்கு பிரயோகம் செய்யும் சித்த மருந்துகளை கீழே குறிப்பிட்டு இருக்கிறோம்.

**மாந்த எண்ணெய் :-** இம் முறை எந்த சித்தர் நூலில் இருக்கிறதோ தெரியவில்லை. ஆனால் இம்முறையை எனது தந்தையின் தந்தை அறுபது வருடங்களும், எனது தந்தை நாற்பத்தைந்து வருடங்களும், என்னால் கடந்த முப்பத்தி மூன்று வருடங்களாகவும் கையாளப் பட்டு வருவதுடன், குழந்தைகளுக்கு எந்த விதமான மாந்த ரோகமாக இருந்தாலும் கொடுத்து குணம் காணப் பட்டு வருகிறது.

**கூட்டுச் சரக்குகள் :-** 1. பெருங்காயம், 2. தோல் நீக்கிய வெள்ளைப்பூண்டு, 3. முற்றின வேப்பம் பட்டை, 4. சுத்தம் செய்த நிலப்பூச்சி என்ற பூநாகம், 5. நேர்வாளம், 6. வசம்பு இந்த ஆறும் வகைக்கு விராகனிடை 1¼ (ஒன்றே கால்) வடித்து ஊற்றின விளக்கெண்ணெய் சேர் ஒன்று (இருபத்தி நான்கு ரூபாயடை).

**செய்பாகம் :-** வசம்பை பஞ்சு போய் தட்டியும், வேப்பம் பட்டையை நையத் தட்டியும், பெருங்காயத்தைப் பொடித்தும், பூண்டையும் - பூநாகத்தையும் நன்கு உறவாகும் படி கல்வத்தில் அறைத்தும், வாளத்தை மேல் ஓட்டை மட்டும் நீக்கி பருப்பு, அதன் உள்ளே இருக்கும் நஞ்சு முளையுடன் தட்டித் துவைத்தும் இவைகள் யாவற்றையும் விளக்கெண்ணெயில் சேர்த்து, எண்ணெய் அதில் விடப்பட்ட மருந்துகள் யாவும் ஒன்றுகும்படி குழப்பி, அடுப்பில் ஏற்றி எரிக்கவும். சட்டியில் சூடு உண்டாகி எண்ணெய் சூடு பிடித்தவுடன் (மூன்று முதல்

ஐந்து நிமிடங்களுக்குள்) எண்ணெய் கொதி கிளம்பி நுரை பொங்கி வரும். இதுவே பதமென உடனே இறக்கி அப்படியே வைத்துவிடவும், எண்ணெயிலுள்ள நுரை அடங்கி ஆறியவுடன் சுத்தமான வாய் மூடி யுள்ள பீங்கான் கோப்பையில் கடுகுடன் வடித்து வைத்துக் கொள்ளவும்.

பிரயோகம் :- எந்த விதமான மாந்த ரோகமாக இருந்தாலும்; மாந்த வியாதியில் மிக்கக் கொடியதெனக் கருதும் சுரத்துடன் கூடிய அள்ளு மாந்தம், கோ மாந்தம், சுழி மாந்தம், பெருச்சாளியைப் போல் இறைச்சல் செய்துக் கொண்டு வயிறு தூக்கி அள்ளும் சுரமும் இருந்தாலும் இந்த மாந்த எண்ணெயை இரண்டு அல்லது மூன்று நாட்கள் காலையில் ஒரு வேளையாகக் கொடுத்து வந்தால் போதுமான தாகும். மிக்க ஆச்சரியப்படும் படியான குணத்தைக் காணலாம்.

அளவு :- குழந்தைகளின் வயது, உடல் வலு, நோயின் அளவு தன்மை இவைகளை நுணுக்கமாக கவனித்து, ஒன்று முதல் ஒன்றரை தேக்கரண்டி ஷ எண்ணெயின் தெளிவு மட்டும் காலையில் ஒரு வேளை யாகக் கொடுத்து வரவும். பால் குடிக்கும் குழந்தைகளுக்குத் தாய் புளி இல்லாத பத்தியமாகவும், ஆகாரம் சாப்பிடும் குழந்தையானால் புனர் பாகம் மட்டும் கொடுத்து வரவும்.

மாந்த ரோகத்தில் ஷ எண்ணெயை காலையில் மட்டும் கொடுத்து மாலையில் **புலிப்பாணி 500-ல் காணப்படும் அக்ரசஞ்சீவி மாத்திரை** ஒன்று அல்லது இரண்டு, தாய் பால் தேன் சமனிடை சேர்த்து கொடுத்து வரவும். குழந்தைகளுக்கு மாந்த நோய் முற்றிலும் நீங்கிய பின்; நோயால் பாதிக்கப் பட்ட குழந்தை மிக்க பலவீனமாக இருக்கும். இச் சமயத்தில் சந்தர்ப்பம் - சூழ்நிலைக்குத் தக்கவாறு உடற்தேற்சிக்கான ஏதாவது ஒரு மருந்தை சில நாட்களுக்குக் கொடுத்து வந்தால் குழந்தை மிக்க குண மாகி விடும்.

குறிப்பு :- மேலே சொல்லப் பட்டிருக்கும் மாந்த எண்ணெய் குழந்தை வைத்தியம் செய்யும் சித்த வைத்தியர்களுக்கு ஒரு விருந்து போன்றுகும்.

பொதுவாக குழந்தைகளுக்கு மாந்த நோய்கள் உண்டாவதற்கு முக்கிய காரணங்கள்: எருமைப் பால், நெய், நன்றாய் பழுக்காத வாழைப் பழம், தேங்காய், இழநீர், கடலை, புளித்த மோர், மாம்பழம், பலாப் பழம், உளுந்து, மொச்சை, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, புளியங் கொட்டை முதலியன பால் பண்டங்கள், வாளை மீன், கொண்டை மீன், மாமிசங்கள் முதலிய வாய்வு பதார்த்தங்களையும் குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் தாய்மார்கள் அதிகமாக உண்பதாலும், தான் உண்ட உணவுகள் ஜீர்ணமாகாதிருக்க ஏதுவான கண் விழித்தல், புணர்ச்சி முதலிய வைகளாலும், தாயின் உணவுப் பையில் சென்ற ஆகாரம் நன்கு ஜீர்ணிக்கப் படாமல் மிக்க கொடிய புளிப்பேறி விஷமாகி

இரத்தத்தில் கலந்து பாலாக மாறி விடுவதால்; அப்பாலைக் குடிக்கும் குழந்தைகளுக்கும், உணவு உண்ணும் குழந்தையானல் குழந்தையிடம் தாய் கொண்டிருக்கும் அன்பின் காரணமாக கொடுக்கக் கூடாத மேலே கண்ட ஆகாரத்தில் ஏதேனும் ஒன்றைக் கொடுப்பதனல் மாந்த நோய் பற்றி விடுகிறது.

பொதுவாக குழந்தைகளுக்கு மாந்த நோய் பற்றுவது தாயின் பாலின் குற்றத்தாலும், குழந்தைக்கு பிறந்த முதல் பதினெட்டு மாதங்கள் வயது நிரம்புவதற்குள் குழந்தையின் தாய், தந்தை மணவாழ்க்கையில் ஈடுபடுவதாலும் என்பதை அறிந்து நடந்து கொண்டால் கூடுமானவரை குழந்தை பிள்ளைப் பிணிகளால் அதிகம் பாதிக்கப் படாமல் தப்பித்துக் கொள்ளும்.

## கணை நோய்

இங்க ரோகத்தை கணை என்றும் கணம் என்றும் சொல்வதுண்டு. இந்நோய் கெர்ப்பச் சூட்டினல் ஏற்படுவதாக சித்தர் நூல்கள் கூறுகின்றன. கருவுற்றிருக்கும் பெண் சரீர சம்மந்தத்திற்கு சிறிதும் லாயக்கற்றவள் என்பதை சமூகப் பெரியோர்கள் சொல்லும் சொல்லில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. இதை இன்றைய ஜன சமுதாயம் சற்று கவனித்து நடந்தால் கருவிலேயே சூடுபற்றி உறுப்புகள் சரியான வழர்ச்சியடையாமலும், கருவில் வளரும் குழந்தையின் எலும்புகளுக்குள் ஏற்படும் *மச்சை தாது* எலும்பிற்குள்ளிருக்கும் மூளை போன்ற வஸ்து சரிவர அமையாமலும், இடை குறைச்சலுடனும் பிறக்கும் சிசு. காலக்கிரமத்தில் இக்கணை நோய் பற்றி, அது பல வகையாக பின் வயதுக் கிரமத்தில் குழந்தை வளர்ந்து வரும் பொழுது க்ஷய ரோகம் கொண்டவர்களைப் போல் காணப்படும் படியான நிலைமையை மாற்றி விடுகிறது. இங்கு நான்

x x x

சொல்லும் கருத்தின் அடிப்படையை அமுதுவின் வாசக நேயர்கள் சிறிது ஊன்றி கவனித்தால் விஷயம் விளங்காமல் போகாது.

இந்தக் கணை ரோகத்தைப் பற்றி கவனிப்போம். இக்கணை ரோகம் எத்தனை வகைப் பட்டதென்று நிச்சயமாகக் கூற இயலவில்லை. சிலர் பத்தென்றும், மற்றுஞ் சிலர் இருபத்தைந்தென்றும் கூறுகிருர்கள். நமக்குத் தெரிந்தவரையில் எமது அனுபவத்தில் கண்ட கணைரோக வகைகள் இதன் கீழே குறிப்பிடுகிறேம்.

**கணை ரோக வகைகள் :-** வாத கணம், பித்த கணம், சிலேத்தும கணம், மாந்த கணம், நீர்க் கணம், சூலக் கணம், பிரளிக் கணம், சுழிக் கணம், மகா கணம், வரட் கணம், கொதிப்புக் கணம். ஊது கணம், வீக்கக் கணம், ஆமக் கணம், தேரைக் கணம், போர்க் கணம், பிறக் கணம், முக்குக் கணம், மூலக் கணம், இரத்தக் கணம், விசமாந்தக் கணம், ஊதுமாந்தக் கணம், அந்தகக் கணம், மாந்தக் கணம், எரி கணம், இன்னும் எத்தனையோ வகைகள் இருப்பதாக நூல்களில் ஆராய்ச்சியிலிருந்து தெரியவருகிறது.

இந்த நோய் எத்தனை வகைப்பட்டதாக இருந்தாலும், நுணுக்க அறிவுடைய சித்த வைத்தியர்கள் ஒவ்வொரு கணத்தின் தன்மை - தரம், அதனுடன் இணைந்திருக்கும் கூட்டு வியாதிகள் (ரிலேடீவ் டிஸீஸ்) இவைகளை கூர்ந்து கவனித்து அவைகளை தாவாரி பிரித்து வாத-பித்த-கிலேத்தும இனங்களில் தொகுத்துக்கொண்டால் சுலபமான முறையில் நோயை பரிகரிக்க முடியும்,

பொதுவாக, கணை ரோகத்திற்கும் மாந்த ரோகத்திற்கும் எளிதில் வித்தியாசம் கண்டுபிடிப்பது முடியாமலே இருக்கிறது. மாந்தம் முற்றியே கணம் உண்டாவதாக வைத்திய நூல்கள் கூறுவதும், அனுபவமுள்ள குழந்தை வைத்தியர்களின் கருத்தும் ஒன்றுகவே அமைகிறது.

எந்தவிதமான கணைரோகமாக இருந்தாலும் ஆரம்பத் தோற்றத்தின் குணங் குறிகள் கூடுமானவரை கீழ்கண்ட படியாகவே இருக்கிறது. குழந்தைகள் தங்கள் புறங்கையை முகத்தில் தேய்த்துக்கொண்டு அழுவதற்கு ஆரம்பிக்கும். காய்ச்சல் ஏற்பட்டு நேரத்திற்கு நேரம் அதிகமாகிக் கொண்டே போகும். தொண்டை கம்மலும், புகைச்சலும் ஏற்பட்டு, வரட்சியான இருமல் இருக்கும் முகம் கணகணப்பாகவும், கஷ்ட சுவாசமும் இருக்கும். குழந்தை மூச்சு விடும்போது கரபுரவென சத்தம் உண்டாகும். இருமி இருமி சிறிது சளி வெளிப்படும். பகலில் இருப்பதைக் காட்டிலும் இரவு நேரங்களில் வியாதியின் கடுமையும் - கொடுமையும் அஞ்சும்படியாக இருக்கும். குழந்தை கழுத்தின் பின்புறமாகத் தலையைத் தொங்க வைத்துக்கொள்ளும். குழந்தை சுவாசிக்கும்போது நெஞ்சு உயர்ந்தாலும், உடல் முழுவதும் வியர்த்து நனைந்திருந்தாலும் ஆபத்தையே உண்டாக்கும், இந்நிலையில் குழந்தை தண்ணீர் குடிப்பது கூட கஷ்டமாக இருக்கும் சில சமயங்களில் இருமல் கொஞ்சமாகவும், அல்லது இல்லாமலேனும் இருப்பது போலிருந்து, மிகவும் ஆபத்தான சமயத்தில் தொண்டை கம்மல் அதிகரித்து; சுவாசம் சீக்கிரம் - சீக்கிரமாக விடப்பட்டு, நாடி நடை குறைந்தும்; முகம் வெளுக்கும்; உதடுகள் நீல நிறமாக மாறிவிடும். இந்நிலையில் குழந்தைகளுக்கு இழுப்பு கண்டால் சில குழந்தைகளுக்கு மரணமும் சம்பவிக்க ஏதுவாகும்.

கணை ரோகத்தில் கணைச்சூடு ஏற்பட்டால் பாவம் அக்குழந்தையின் எதிர்காலம் முழுவதும் நோயாளியைப் போன்ற தோற்றமே காணும். இதைக் கணைக் காய்ச்சலென்றும் சொல்லலாம் இக்கணைச்சூடு ஏற்பட்ட குழந்தைகளுக்கு சரியான சிகிட்சை செய்து நோயை உடலிலிருந்து அறவே களையாவிட்டால், அக்குழந்தை நாம் மேலே கூறியபடியே இருக்கும். இச் சூடு குழந்தைகளுக்கு பன்னிரண்டு வயதுவரை உடலில் ஒட்டிக்கொண்டிருந்து, அதற்குப் பின் அவர்களை பலவீன முடையவர்களாக்கி விடும். இவ் வியாதியினுல். குழந்தையின் உயிருக்கு ஆபத்து இல்லையென்றுலும், உடம்பை மிக்க க்ஷீணதசையில் நிரந்தரமாக வைத்துவிடும்.

இக்கணைச் சூட்டின் குணங் குறிகள் பின் வருமாறு: எப்போதும் உடம்புச் சூடாக இருக்குமென்றாலும், பகலைக் காட்டிலும் இரவில் சூடு அதிகமாக இருக்கும் வயதிற்குத் தக்க உடல் வளர்ச்சியின்றி இருக்கும். ஆகாரம் எடுக்காது. எப்போதும் உடல் அயர்ச்சியாகவே இருக்கும். சிலர் உணவு உண்டவுடன் மலம் கழிக்கப் போவார்கள். நெஞ்சு கூடு கட்டி உயர்ந்திருக்கும் கண்களில் எரிச்சலும் பீழையும் சார்வதுடன், கண்களிலும் மேல் புருவங்களிலும் வலி ஏற்படும். புத்தகங்களை கூர்மை யாகப் பார்த்தால் கண்களில் ஒருவித கூச்சத்துடன் கண்ணீரும் மல்கும். எப்போதும் வாய் நாற்றமாக இருக்கும். இந்நோயில் சிலருக்கு மலச் சிக்கல் ஏற்பட்டு மலம் ஆட்டுப் புழுக்கைகளைப்போல் ஆசன வாயிலிருந்து உதிருவது முண்டு.

இதன் ஆரம்பத்திலேயே; கணை ரோகம் உண்டாவதற்கு கெர்ப்பச் சூடுதான் கரரணமென்று கூறியுள்ளோம். அதன்படி குழந்தை கருவி லிருக்கும் போதே கொடிய சூடேரி எலிம்பிற்குள்ளிருக்கும் *மச்சை தாது* கெட்டு, எலும்புகளின் தத்துவமே மாறுபட்டு இந்நோய் ஏற்பட்டிருக்கும். சில குழந்தைகளுக்கு **சூடு போடும்** பழக்கம் ஒன்று இன்னமும் நமது நாட்டிலிருந்து வருகிறது. இச் செயலைக் கண்டு நாம் அழுவதா ?! சிரிப்பதா ?!

குழந்தைகள் கணை ரோகத்தால் தாக்கப்பட்டிருக்கும் போதும், கணை ரோகத்தால் பாதிக்கப்பட்ட பின்பும் சில கோளாறுகளும், உடல் மாறுதல் களும் நிகழ்வ துண்டு. ரோகத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் போதும், குணமான பின்பும் அடித் தள்ளுதல், இரத்த பேதி, ஆசனக் கடுப்பு, நீர்ச் சுருக்கு, இருமல் பலவித கழிச்சல், மூலம், வாய் நாற்றம், வயிற்றுப் பொருமல் முதலிய நோய்கள் உண்டாகலாம். இந்நிலையில் அவ்வப் போது அவைகளுக்குரிய சிகிட்சைகளைச் செய்யாது போனால் அவைகள் உடலில் நிரந்தரமாகக் குடி கொண்டு, சில சமயங்களில் ஏதாவது ஒரு சிறிய ரோகம் ஏற்பட்டாலும் குழந்தைகளுக்கு அகால மரணம் உண்டாக ஏதுவாகும்.

(தொடரும்)

---

# NOTICE.

**There will be a meeting of the Central Siddha Medical Council at Dasarpuram, Tinnanur on 3-6-56 at 3 p.m. to make arrangements for the 3rd State Siddha Conference at Palani in July 1956. All members are requested to be present.**

**CANCER CLINIC (Siddha): there will be a special public meeting on 3-6-56 at 5-30 p.m. to open the Siddha Cancer Clinic at Dasarpuram, Tinnanur. All interested are invited.**

# குக்கில்

சித்த மருத்துவன்:
**சோ. மு. பொன்னையா, எல்.ஐ.எம். (சென்னை.)**
சித்த மருத்துவ விரிவுரையாளர்,
அரசினர் சுதேச மருத்துவக் கல்லூரி, கொழும்பு.

( 20-ம் பக்கத் தொடர்ச்சி )

—x—

## குங்கிலியம்

**பேதம் :-** குங்கிலியமானது பொதுவில் (1) வெள்ளைக் குங்கிலியம் (2) கருங் குங்கிலியம் என இருவகைப்படும். இவைகளன்றி செந்நிறக் குங்கிலியம், மஞ்சள் குங்கிலியம் என வேறு இரு பேதங்களுமுண்டு. மஞ்சள்நிறக் குங்கிலியமே யூனானி மருத்துவர்களினாற் கையாளப்படும் "றூமிமஸ்தகி" என்னும் பூனைக்கண் குங்கிலியமாகும்.

தற்காலம் செந்நிறக் குங்கிலியம் மருந்துக் கடைகளிற் காணப்படுவது அரிதாயிருக்கின்றது. இங்கு கூறப்பட்ட நாலு வகைகளன்றிக் குங்கிலியத்தை நாட்டுக் குங்கிலியம், சீமைக் குங்கிலியம் என இருதொகுப்பாகவும் பிரித்திதிருக்கின்றார்கள்.

குங்கிலியம், குந்திருக்கம், குக்கில் ஆகியனவெல்லாம் வெவ்வேறு தாவரங்களின் பிசினாகும்.

## வெள்ளைக் குங்கிலியம்

இது மரவகுப்பைச் சேர்ந்தது.

இம்மரமானது இலங்கையிலும், தென்னிந்தியாவில் மேற்குமலைப் பிரதேசங்களிலும். கோதாவரி, பாஞ்சாலத்திலுள்ள கங்கிராப் பிரதேசம், இமயமலை உப - பிரதேசங்களிலுள்ள பகுதிகள், அசாம், நாக்பூர், ஒரிசா முதல் கஞ்சம் வரையுள்ள பிரதேசப் பகுதிகள், மத்தியமாகாணப் பிரதேசங்கள் ஆகியவிடங்களிலுள்ள காடுகளில் வளருகின்றது.

## வேறு பெயர்கள்

(அகத்தியர் பஞ்சகாவிய நிகண்டு - **800** - பக் - **53** - செய் - **26**)

படியாறு துசவசமென்று மதுசமென்றும் பேரு
  பாடினேந் தேவகந்த மென்றும் பேரு
அடியான தெருகெந்த மென்றும் பேரு
  யருளினேந் தேவதார மென்றும் பேரு
வடிவான வகரு மந்த மென்றும் பேரு
  வளமான விந்து தேக மென்றும் பேரு
சடியானச் சலி கந்த மென்றும் பேரு
  சார்வாகச் சொல்லிவிட்டோம் குங்கிலியத்தின் பேரே, (26)

(இ - ள்) ஆதுசவசம், மதுசம், தேவகந்தம், தெருக் கெந்தம், தேவதாரம், அகருமந்தம், விந்துதேகம், சலிகந்தம் என்பனவாம்.

(போகர் நிகண்டு - 1200 - பக் - 203 - செய் - 751).

குங்கிலியத்தின் பேர்தனையே கூறக் கேளு
    கொழுமையா மாழச் சுவாலிலைச் சாரமாகும்
கிங்கிலியமதன் காண காரளப மாகுங்
    கெடிதாகச் சுவாலிலைஞ் சாதுவாகும்
எங்கிலியும் பாடச தூபாக்னி யாகு
    மேற்றமாம் நிதியோபம் வல்லபமாகும்
விங்கிலியம் விரண கோப சமனியாகு
    மிடுக்கான குங்கிலியப் பேருமாமே. (751)

(இ - ள்) ஆழச் சுவாலிலைச்சாரம், மதன் காரளபம், காணக் காரளபம், சுவாலிலைஞ்சாது, பாடச தூபாக்கினி. நிதியோபம், வல்லபம், விரண கோப சமனி, என்பனவாம்.

இவைகளன்றி வெள்ளைக் குங்கிலியத்துக்குக் கீழ்வரும் பெயர்களு முண்டு.

குக்குறு, குங்கிலியமரம், குங்குலு, குருக்காரமரம், குற்பகச்சாரம், குந்தம், கௌசிகதாரி மரம், சலாம், சருவரசம், சலோர்க்கம், ஸ்திரீவாசம், ஈரத்திரையம், தந்திரீதமரம், புண்ணியகாரம் என்பனவாம்.

**B. N :- Shorea Robusta – Gaertn.**
**N. O :- Diptero Carpaceæ,**
**ENG :- Indian Dammer or Sal Tree,**
**SARS :- Sarsa Rasa** (சர்ஸ ரஸ)
**SINH :- Hal - Dummala** (ஹல் தும்மல)

**விபரம் :-** இது ஒரு இலை உதிரும் மரமாகும். மிகவும் அருமையாகத் தான் முற்றுக இலை உதிர்ந்திருக்கும். இம்மரத்தின் பட்டையானது கருமை கலந்த பழுப்பு நிறமாகவும், அழுத்தமாக அல்லது நீளப் போரில் சில வெடிப்புகள் உள்ளதாயுமிருக்கும்.

இலைகள் 10 முதல் 30 சென்றிமீட்டர் நீளமும், 5 முதல் 18 சென்றி மீட்டர் அகலமுமுடைத்தாயும், முட்டை வடிவமான - நீள் சதுரமாயும், நீள் நுனியுடைத்தாயும், கடித்தமாயும், மென்மையாய்ப் பதனிடப்பட்ட தோல் போன்றும், சிலிம்பற்றதாயும், முற்றிய இலைகள் மினுமினுப்பாயும், அடித் தளம் (base) இருதயவடிவமாய் அல்லது வட்டமாயும், 12 முதல் 15 ஜோடி பக்க நரம்புகளுடைத்தாயு மிருக்கும்.

இலைக் காம்பு 1.2 முதல் 2 சென்றிமீட்டர் நீளமும், இலையடிச் செதிள்கள் (stipules) 7·5 மில்லிமீட்டர் நீளமும், மென்மயிருள்ளனவாக வும், உதிர்வனவாகவுமிருக்கும்.

பூக்கள் 1·2 சென்றிமீட்டர் நீளமும், மஞ்சள் நிறமும், அந்தக்கக்க அபரிமித மஞ்சரிகளின், 7·5 முதல் 23 சென்றிமீட்டர் நீளமான கலப்பு மஞ்சரிகளிற் பூத்திருக்கும். பூக்கிளைகள் சாம்பல் நிறமான அடர் தூவி படர்ந்லனவாக விருக்கும்.

புல்லி வட்டக்குழாய் குறுகியதாயும், காயிற் பெருக்காததாயும், உறை வரை ஒட்டி வளர்ந்ததாயும், பிளவுகள் 2·5 மில்லிமீட்டர் நீளமும் சாம்பல் நிறமான அடர்தூவி வெளிப் பக்கத்திற் படர்ந்ததாயும், முட்டை வடிவ மாயும், காயில் விருத்தியடைந்ததாயுமிருக்கும்.

அல்லிகள் ஒடுங்கிய நீள் சதுரமாய் அல்லது ஈட்டி வடிவமாயும், பட்டுப் போன்ற அடர்தூவி வெளிப் பக்கத்திற் படர்ந்ததாயுமிருக்கும்.

மகரந்த கேசரங்கள் 50 வரை அல்லிகளிலும் பார்க்கக் குறுகியன வாகவிருக்கும். இணைப்புகள் செருப்பூசி போன்று தாடியுடைய அநு பந்தங்களாக நுட்பமான 3 கம்பங்கள் மேல் முனையிலுடைத்தாயிருக்கும்.

சூற்பை 3 அறை உடைத்தாயும், சூற்தண்டு செருப்பூசி போன்று மிருக்கும்.

கனி 1·2 சென்றிமீட்டர் நீளமும், முட்டை வடிவமும், கூர் நுனியுடைத் தாயும், வெடிக்காததாயும், மேன்மயிருடைத்தாயுமிருக்கும்.

காய்க்கும் புல்லவட்ட இறக்கைகள் சமயளவற்றனவாகவும், நீள் சதுரம் அல்லது மடல் வடிவமாயும் 5 முதல் 7·5 சென்றிமீட்டர் நீளமும் விரி நுனியுடைத்தாயும் 10 முதல் 15 வரையில் நீளப்போரி லமைந்த நரம்புகள், பலநேரிய, சரிபோரில் அமைந்த குறுக்கு நாளங்களினுல் சேர்ந்த தாகக் காணப்படும்.

## குங்கிலியத்தின் இலக்ஷணம்

இம்மரத்தின் பட்டையைக் கீறி வடியவிட்டு எடுக்கும் ரோசனமே வெள்ளைக் குங்கிலியம் எனப்படும். இந்தக் குங்கிலியமானது கணுக்க ளாகக் (nodules) காணப்படும். இந்தக் கணுப் பிண்டங்களின் விட்டம் 3 முதல் 6 மில்லிமீட்டர் வரை யிருக்கும். சிலசமயங்களில் கூடுதலாகவுங் காணப்படும். இந்தக் கணுக்களின் வெளிப்பக்கத்தில் வெண்தூவி யடர்ந்து மூடியிருக்கும். ஆனுல் அதன் உட்பக்கம் வெளிறின நிறமாகவும், ஒளி ஊடுருவில் பாயக்கூடியதாயும், அல்லது ஒளிவீசுகிறதாயுமிருக்கும்.

இந்தப் பிசினுனது இலகுவில் நொருங்கக் கூடியதாயும், சூடாக்கினுல். அதிகம் கையில் ஒட்டாததாயுமிருக்கும்.

100 டிகிரியில் இளகுந்தன்மை பொருந்தியதாயும், 150 டிகிரியில் துலக்கமான திரவமாக உருகுந்தன்மை பொருந்தியதாயும், இலகுவில் நெருப்புப் பிடியாததாயுமிருக்கும்.

இதன் முறிவுவாய் சிப்பிவடிவமாயும், கண்ணுடி போன்ற பளபளப் பாயும், காற்றுக் குமிழிகளுடைத்தாயும், மலினமுடைத்தாயுமிருக்கும்.

புதுக் குங்கிலியமானது மரப்பிசின் போன்ற வாசனை பொருந்திய தாயும், நாட்பட்டது வாசனையற்றதாயுமிருக்கும்.

இதன் கனதி (sp. gravity) 1·062 முதல் 1·123 வரை இருக்கும்.

இது குளிர்ந்த சாராயத்தில் ஓரளவு கரையும். கூடிய அளவில் ஈதரில் கரையும். கொதிக்கும் சாராயத்திலும் நிரந்தரமான எண்ணெய்களிலும், பரிணமிக்கக்கூடிய எண்ணெய்களிலும் க்ளோரிபார்மிலும் இலகுவிற் கரையும்.

(தொடரும்)

# மருந்து சுத்தி முறை

### சித்த டாக்டர் ம. அமிர்தலிங்கம்

(முன் தொடர்ச்சி)

——::——

**10.** அரத்தை :- மேல் தோலைச் சீவி சிறு துண்டுகளாக நறுக்கி வெயிலில் உலர்த்தி வைத்துக் கொள்க.

**11.** வசம்பு :- சுட்டுக் கரியாக்கிக் கொள்க.

**12.** கொத்தமல்லி :- வெந்நீரிலேனும், பழ ரசத்திலேனும் கிழி கட்டி எரித்து வெயிலில் உலர்த்தி எடுத்துக் கொள்க.

**13.** கடுக்காய் :- கழுநீரில் ஊரப்போட்டு மஞ்சள் நீரைப்போக்கி, வித்து நீக்கி உலர்த்திக் கொள்ள சுத்தியாம்.

**14.** நெல்லி வற்றல் :- பால்விட்டு வேகவைத்துக் கொட்டை நீக்கி உலர்த்திக் கொள்க.

**15.** தான்றிக்காய் :- தாழை விழுதுச் சாற்றில் ஒரு சாமம் ஊற வைத்து விதை நீக்கி இரவியிலுலர்த்திக் கொள்க.

**16.** கற்கடக சிங்கி :- பசு நெய்யில் அல்லது வாதுமை நெய்யில் வறுத்துக் கொள்க.

**17.** கடக ரோகினி:- வேப்பிலைச் சாற்றிலேனும், நொச்சிச் சாற்றிலேனும் ஒரு சாமம் ஊறவைத்து வெயிலில் உலர்த்துக.

**18.** அதிமதுரம் :- நல்ல நீரில் அலம்பி மேல் தோலைச் சீவிச் சிறு துண்டுகளாக நறுக்கி உலர்த்திக் கொள்க.

**19.** கார்போக அரிசி :- திருநீற்றுப் பச்சிலைச் சாற்றில் நனைத்துலர்த்துக.

**20.** பெருங்காயம் :- இதனைக் கரி நெருப்பில் பொரித்துக் கொள்வதே சுத்தியாம் ; தாமரை இலைச்சாற்றில் ஒரு நாழிகை ஊறவைத்து உலர்த்திக் கொள்வதும் ஒருவகை சுத்தி.

**21.** வாலுழுவை :- சோற்றுக் கற்றாழைச் சாற்றில் கழுவி வெயிலில் உலர்த்துக.

**22.** சேங்கொட்டை :- பயங்கர மருந்துச் சரக்காக எண்ணப் படுபவற்றில் இதுவு மொன்று. இது ஒரு நஞ்சுச் சரக்கு என்பது உண்மையே. சேங்கொட்டையில் மேல் தோலுக்கும் விதைப் பாகத்திற்கும் இடையில் பிசுபிசுப்பான கரு நிறமுள்ள எண்ணெய் அடங்கியுள்ளது. கொட்டையை நசுக்கி எண்ணெய் எடுப்பதுண்டு. இதனைச் சேங்கொட்டைப் பால் என்று கூறுவர். இந்தப் பால் கொடிய நஞ்சுத்தன்மை வாய்ந்தது. இப்பால் உடம்பில் பட்டால் பட்ட விடத்தில் புண் உண்டாகும். இப்புண்கள் பெரு விரணமாகி உயிருக்கே உலை வைத்துவிடுவதுமுண்டு. இப்பாலின் வாடை பட்டாலும் பெரும்பாலோர்க்கு முக விக்கங்

காணும்; உடலில் நீரேற்றங் காணும்; சிறுநீர் குறையும். எனவே இதனை மிகக் கவனமாகம் பயன்படுத்த வேண்டும்.

மேற்கண்டவாறு உண்டாகும் விடத்தன்மையை முறிக்க, புளியிலைக் கியாழம் அல்லது தேங்காய்ப்பால் உள்ளுக்குக் கொடுக்கலாம். புளி, புங்கு ஆகிய மரங்களின் காற்றுப்பட்டாலும் விடம் முறியும். இக்காரணம் பற்றியே தமிழில் நாட்டு வழக்கு ஒன்று உண்டு. சேராங் கொட்டைப் பால் வாடைப்பட்டு முகம் உடல் வீக்கங்கண்டோர் புங்கு அல்லது புளி ஆகிய மரங்களில் ஒன்றைக் கட்டிப்பிடித்துக் கொண்டு "புங்கண்ணு புளி யண்ணு, சேங்கொட்டை யண்ணன் செய்த சேதியைக் கேளண்ணு" வென்று அழுது முறையிட வேண்டுமென்று கூறுவர். இதன் விடத்தை முறிக்க வங்க உப்பு செய நீரையும் உபயோகிக்கலாம்.

இதனை முறைப்படி சுத்தி செய்வதால் இதன் நோய் தீர்க்கும் குணம் சிறப்புறுகிறது. நச்சுத்தன்மை அகல்கின்றது. மற்ற கூட்டுச் சரக்குக ளுடன் சேர்த்து முடித்த மருந்து அமிர்தமெனப் போற்றத் தக்கது.

இரசத்தால் தீரும் பெரும் நோய்களும் இச் சேராங் கொட்டையால் தீருமெனப் பெரியோர் கூறுகின்றனர். இது முற்றிலும் உண்மை யென் பது அனுபவத்தில் விளங்கும்.

(தொடரும்)

---

[ராப்பர் 3-ம் பக்கத் தொடர்ச்சி]

தால் இந்த சந்தர்ப்பத்தில் பதிவு செய்து கொள்வதற்காக ஒற்றுமையுடனும், விடா முயற்சியுடனும் இருக்கவேண்டும் என்பதை உருக்கமாக கூருகிறேன். முற்காலத்தில் 18 சித்தர்களும் ஒன்று கூடி சங்கக்கழகம் ஏற்படுத்தி ஒற்று மையுடன் இருந்து வந்திருக்கிருர்கள்.

விஞ்ஞானம், சுகாதாரம் இல்லை என்று நம்மை வெறுக் கும் அரசாங்கம், நம்மிடம் போதிய பொருள் பலம் இல்லை என்பதை உணராமல் இவ்வித சால் ஜாப்பை சொல்லி பழங்கால பண்பை அழிக்க பார்ப்பது முறை ஆகாது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு சித்த வைத்தியர்கள் சிகிச் சை செய்து வருவது அரசாங்கம் அறிந்திருந்தும் நம்மில் ஒற்றுமை இல்லை என்பதை தெரிந்து இதர வைத்தியத்தை கவனிக்கிருர்கள்.

ஆகையால் நம் சித்த வைத்தியர்கள் ஒன்றுகூடி இச் சந்தர்ப்பத்தில் தபேக்கமிட்டி நமூன பாரத்தை செய்து ஆவன செய்வதற்கு ஒத்துழைப்பீர்களென்று நம்புகிறேன்.

குறிப்பு:-மற்ற சி... வைத்தியர்களும் ... சித்த வைத் தியக் கழகத்தில் ரிஜிஸ்தர் செய்து கொள்ளலாம்: ஆ-ர்.

209562

# சி. வை. சங்கக்குறிப்புகள் :

## 15-4-56 பெரம்பலூர்

*சித்தவைத்திய சங்ககூட்டத்தில் ஸ்ரீ சங்ககாரியதரிசி*

K. அந்தோனிசாமி அவர்கள்

நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

எமது தாலூகாவில் உள்ள கிராமங்களில் பரம்பரையான சித்தவைத்தியர்கள் அதிகம் உள்ளனர். நாம் எல்லோரும் ஏழை வைத்தியர்கள். அதனால் நம்மை அரசாங்கம் கவனிப்பதாக தெரியவில்லை. தனி ஒருவனின் முயற்சியால் எக்காரியமும் முடியாது என்ற நோக்கத்தோடு, பல பாகங்களில் உள்ளது போல் நாமும் இந்த சங்கத்தை ஏற்படுத்தி 7-ஆண்டுகள் ஆகிறது. நம்மை போல் பெரிய நகரங்களிலும் பல ஆண்டுகளாக நடந்து வருகிறது: சங்கங்களின் உழைப்பாலும் நம்மவரின் முயற்சியாலும் அரசாங்கம் சில சலுகைகளை கொடுத்தது.

1938-ல் ஒரு சிலர் பதிவு செய்து கொண்டனர். ஆயிரக்கணக்கானவருக்கு பதிவு கிடைக்கவில்லை. சங்கங்களின் விடா முயற்சியால் 1950க்கு பிறகு (வில்லேஜ் வைத்தியாஸ கீம்) என்று ஒரு 6 மாதப் படிப்பை கொடுத்து சிலரை பதிவு செய்தார்கள். அதுவும் 1954-ல் நிறுத்தப்பட்டு விட்டது. ஏனென்றால் நம் கிராமாந்திரத்தில் படிப்பு சொற்பமுடையோருக்கு ஆங்கிலம் தெரியாததாகையால் மேற்கத்திய அலோபதி வைத்தியம் கற்றுக் கொடுக்கப்பட்டது. நகரங்களிலுள்ள சிபார்சு உடைய ஒரு சிலருக்கே இடம் கிடைத்தது. நம் பரம்பரை சித்த வைத்தியம் அங்கு போதிக்கப்பட வில்லை. கிராமாந்திரத்திலுள்ளவருக்கு சொற்ப படிப்பு காரணமாக அங்கு இடம் கிடைக்கவில்லை என்பதை சங்கங்களின் மூலம் மத்திய அரசாங்கம் அறிந்த பின் அதை ரத்து செய்து 1956 ஜனவரியில் தபேக்கமிட்டியை நியமித்து நம் மாகாணத்தை பார்வையிடச் செய்தார்கள்.

அதுசமயம் நமது மாகாண மத்திய சித்த வைத்திய கழகத்தின் மூலம் நம்மவர்களின் விலாசங்களையும் வைத்தியம் செய்யும் கால அளவையும் ஆங்காங்கு உள்ள சங்கங்கள் மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். இந்த சலுகை 31—7—56-க்கு பின் முடிவடையும்போல் தெரிவ

[40 ம் பக்கம் பார்க்க]

# SIDDHA AYULVEDIC PRACTITIONERS

## Reliable Treatment for Specific Diseases

Advt. Rates: Rs. 8/- for 12 issues - with 12 Copies of Amuthu payable in full in advance to the Manager AMUTHU.


Physician: **Sadhu Devadoss**
Special treatment for Cancer, T. B., Asthma, Skin Diseases

**Cancer Clinic, (Siddha)**

**Dasarpuram P. O.,**
**Tinnanur R. S.**

Dasar's Siddha Dispensary,
Physician: **S. Chelliah**
Special treatment for

**Whooping Cough**

& all Children's Diseases,
**Dasarpuram P. O.,**
**Tinnanur R. S.**

**VEL PHARMACY & POLYCLINIC,**
**77, Strahan's Road,**
**Otery P. O. Madras.**
Special Treatment; all chronic incurable Cases
Rev. **Kaviraj Z.A. James** B.D.

TO LET
**Rs. 8/-**
**per year in Advance**
**Single insertion Rs. 1/- only**

TO LET
Rs. 8/-
**For 12 issues in ADVANCE.**

Physician (Specialist)
**K. T. Krishnamoorthy Achari**
LEPROSY CURE
**" Melmayil Marundhu "**
Eswara Karunanidhi Megha Kushta Nivarana Orginal Medical Hall
5/22, MELMAYIL P.O.
(VIA) KATPADI.

**விளம்பரம்**
முறைக்கு
ரூ. 8/- முன் பணம் கட்டுக;
விபரம்:-
அமுது Vol. 4. No. 12.
கவர் பக்கம் 4. பார்க்க.

**TO LET**


Edited & Published by Siddha Dr. H. Devadoss, B.A., L.T., M T.Sc.,
Printed by Sri Subbalakshmi at Sundaram Press,
25, Chandrappa Mudali St., Sowcarpet, Madras-1.